# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

## மீட்பின் அன்னை மறைத்தளம்

## பங்குச் சபையும், நிர்வாகச் சபையும் இணைந்த கூட்ட அறிக்கை

பங்குச் சபையும், நிர்வாகச் சபையும் இணைந்த கூட்டம் 12- 12- 2009 அன்று 6:30 மணியளவில் பங்குத் தந்தையின் செபத்துடன் ஆரம்பமானது. இவ்விரு சபைகளும் பங்கின் வளர்ச்சி கருதி வருடத்துக்கு இரு தடவைகள் ஒன்றுகூடுவது நன்மை பயக்கும் என்று பங்குத்தந்தை கூறினார். அடுத்த ஆண்டுக்கான செயற்திட்டம் பற்றிக் கலந்துரையாடுகையில், ஆலயத்தின் பின்புறமுள்ள வாகனத்தரிப்பிடம், ஆலயப்படிக்கட்டுக்கள், மேலும் பீட வேலைப்பாடுகள் முதன்மையானவை எனத் தீர்மானிக்கப்பட்டது. பீட வேலைகளுக்குரிய வரைபடமொன்றை ஆயர் இல்லத்திலிருந்து ஒருவர் இலவசமாக வரைந்து தருவதாகவும், அதை எம் பங்குமக்களின் விருப்பத்திற்கிணங்க, அவர்களின் உதவியுடன் அவ்வேலைகளைச் செய்வதாகவும், மேலும், இறைவார்த்தை வாசிக்கப்படும் இடத்தில் இறைவார்த்தையை மட்டும் வாசிப்பதற்கும், அறிவித்தல்கள் வாசிப்பதற்கு என பிறிதொரு இடமும் அமைக்கப்படவேண்டும் என்றும் பங்குத்தந்தை கூறினார். ஆலயத்தின் 'பொருள் இருப்பு' விபரங்களை சேகரித்து ஒருங்கிணைந்த அறிக்கை ஒன்று தயாரிப்பதற்கு ஒவ்வொரு பொறுப்பிலுள்ளவர்களும் தங்கள் தங்கள் பொறுப்பிலுள்ள 'இருப்பு' விபரங்களைச் சேகரித்துத் தந்தால், ஏதுவாக இருக்கும் என்றும், இதனை தை மாதம் 15ம் திகதியிலிருந்து மாசி மாதம் 15ம் திகதிக்கு முன்னராக முடிக்கவேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், மறைத்தள ஒளிவிழா ஆயத்தங்கள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றமையால் அனைவரும் தேவையை உணர்ந்து செயற்படவேண்டுமென்றும் பங்குத்தந்தை கூறினார். மேடையலங்காரத்தையும், வீடியோ படப்பிடிப்பு, இருக்கை வசதிகள் போன்ற பொறுப்புக்களை இளைஞர்களும், மேடையில் திரைச்சீலை போடும் பொறுப்பை திரு. சீலன், திரு. ஜெனதாஸ் அவர்களும், ஒலியமைப்பை திரு. கஜேந்திரன் அவர்களின் உதவியுடன் திரு. அம்புறோஸ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் முன்வந்தனர். மேலும், கன்ரீன் பொறுப்பை திரு. அல்பிரட் அவர்கள் மரியாயின்சேனையின் சார்பில் தான் ஏற்றுக்கொள்வதாகவும், கடந்த வருடங்களில் ஏற்பட்ட சில சிக்கல்கள் இம்முறையும் ஏற்படாதவாறு அவற்றை நன்கு கவனித்துக்கொள்வதாகவும் கூறினார். அத்துடன், ஒளிவிழாவில் நம் கலாச்சாரம் சார்ந்த நிகழ்ச்சிகளை தான் காணவில்லையென்றும் வருத்தத்துடன் கூறினார். மேலும், ஒளிவிழாவுக்கு ஆதரவு தந்து உதவிய வர்த்தகர்களின் விளம்பரங்களை பொறுப்பேற்று ஒளிவிழாவில் அறிவிப்பை கடந்த வருடங்களில் திருமதி நந்தினி பிலிப்பு, திருமதி யேசுமலர் அவர்களும் செய்தார்கள். இம்முறை திரு. நெல்சன் அவர்களிடம் அப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

**ஆலய பங்குச்சபையின் மாதாந்த கூட்ட அறிக்கை 12-12-2009**

ஒளிவிழா நிகழ்வுகளின் ஒத்திகை 17- 12- 2009 வெள்ளிக்கிழமை நடைபெறுமென்றும் பங்குத்தந்தை கூறினார். ஒளிவிழாவின் வரவேற்புரையை பங்குத்தந்தையும், நன்றியுரையை பங்குமக்களில் ஒருவர் நிழ்த்தினால் நல்லது என்றும் கூறப்பட்டபொழுது, நன்றியுரைக்குத் தான் ஒருவரை ஆயத்தம் செய்வதாக திரு. அலெக்ஸ் அவர்கள் கூறினார். மேலும், சான்றிதழ்கள் வழங்கும் வேளைகளில், பெயர்ப்பட்டியல் வாசிப்பதற்கு, புதிதாக மறையாசிரியர்களாக பணிபுரிய முன்வந்திருப்பவர்களுக்குச் சந்தர்ப்பமளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆலயத்தின் முன்புறத்தில் வாகனத்தரிப்பை ஒழுங்கமைப்புச் செய்யும் பொறுப்பை திரு. அமிர்தநாதர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

திருமதி. மரியகொறட்டி அவர்களின் இறுதிச் செபத்துடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

அருட்.தந்தை அன்றூ தவராஜசிங்கம்
பங்குத்தந்தை
மீட்பின் அன்னை மறைத்தளம்

திரு.நெல்சன் ஆரோக்கியநாதன்
செயலாளர் (பங்குச்சபை)
மீட்பின் அன்னை மறைத்தளம்